<u>சுருக்கம்</u>

பொதுப்பணித்துறை – கட்டிடம் - சென்னை தரமணியில் உள்ள தமிழக அரசு கட்டிட ஆராய்ச்சி மையத்தினை புதிய ஆய்வுக்கூட உபகரணங்களுடன் மேம்படுத்த ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித் (ஜி1) துறை

அரசாணை (நிலை) எண்.62

நாள் : 22.4.2009
திருவள்ளுவர் ஆண்டு 2040
சித்திரை – 9

படிக்க :

தலைமைப் பொறியாளர் (கட்டடம்) கடித எண்.உசெபொ/
தொ.நு.10(பி)/37113/2006, நாள் 14.10.2008.

---

<u>ஆணை</u>:

மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் 31.8.2006 அன்று பொதுப்பணித்துறையின் மானியக் கோரிக்கையின்போது சென்னை தரமணியிலுள்ள தமிழக அரசு கட்டிட ஆராய்ச்சி மையம் விரிவுபடுத்தி மேம்படுத்தப்படும் என்றும், அவ்வாறு மேம்படுத்துவதன் மூலம் தேவைக்கேற்ப தொடர் கல்வியினையும் திறமைகளையும் பொறியாளர்களுக்கு கிடைக்க பயிற்சி அளித்தல், பொறியியல் மற்றும் மேலாண்மை சம்பந்தமான பயிற்சி அளித்தல், சமுதாயத்திற்கு பயன்படும் வகையில் தொழில்நுட்ப சேவைகள் மற்றும் ஆலோசனைகள் வழுங்குதல், கட்டட அமைப்பிற்கும் கல்வி நிறுவனங்களுக்கும் இடையே பாலமாக செயல்படுதல், பொறியாளர்களுக்கு தேவையான நல்ல வளர்ச்சியும் இன்றைய புதிய தொழில் நுட்ப மாற்றங்களையும் வழுங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவித்தார்.

2. மேற்காணும் அறிவிப்பிற்கிணங்க தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) அவர்கள் சென்னை தரமணியிலுள்ள தமிழக அரசு கட்டிட ஆராய்ச்சி மையத்தினை மேம்படுத்தி விரிவாக்கம் செய்து அதில் பொதுப்பணித்துறை பணியாளர்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு பயிற்சி நடத்துவதற்கு கீழ்க்கண்ட அத்தியாவசிய ஆய்வுக்கூட உபகரணங்கள் தேவைப்படுகின்றன என்று தெரிவித்துள்ளார்.

| வ.எண். | பொருள் | அளவு | ரூபாய் |
|---|---|---|---|
| | <u>Non Destructive Testing Equipments</u> | | |
| 1. | Digital Rebound Hammer (Model W-D-1000) | 1 | 3,24,065/- |
| 2. | V-Meter Mark-II (Model V-C-7901) | 1 | 4,49,280/- |
| 2(a) | <u>மேற்காணும் கருவிக்கான துணைக்கருவி</u> Hand-held terminal Model V-C-4860 | 1 | 2,20,480/- |
| 3. | Rebar Datascan (Model R-C- 4974) | 1 | 2,96,350/- |
| 4. | Power Back-up Battery Unit | 1 | 20,000/- |
| | | | **13,10,175/-** |
| | வரிகள் மற்றும் மதிப்பு கூட்டுவரிகள் | | 1,63,770/- |
| | சில்லறை செலவுகள் (Provision for contingencies) | | 26,055 |
| | மொத்தம் | | **15,00,000/-** |

**3.** மேற்காணும்நிலையில் சென்னை தரமணியில் உள்ள தமிழக அரசு கட்டிட ஆராய்ச்சி மையத்தினை புதிய ஆய்வுக்கூட உபகரணங்களுடன் மேம்படுத்த ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு அரசின் நிர்வாக ஒப்புதலை அளிக்குமாறு தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) அரசைக் கோரியுள்ளார்.

**4.** மேலே பத்தி 3ல் காணும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களின் கருத்துருவினை ஏற்று சென்னை தரமணியிள்ள தமிழக அரசு கட்டிட ஆராய்ச்சி மையத்தினை புதிய ஆய்வுக்கூட உபகரணங்களுடன் மேம்படுத்த ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும், நிதி ஒப்பளிப்பும் செய்து அரசு ஆணையிடுகிறது.

**5.** மேலே பத்தி 4ல் காணும் செலவினத்தினை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கலாம்.

> "**2059** – பொதுப்பணிகள் – 80 – பொது – 001 – நெறிப்படுத்தலும் நிருவாகமும் - 1 திட்டத்தில் சேராதது – BG நிருவாகப் பொறியாளர்கள் – செயல்முறை கோட்டங்கள்-19 இயந்திரமும் சாதனமும் - 01 – வாங்குதல்.
> (கு.தொ.கு.**2059** – 80 – 001 – BG 1916)

6. மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் "புதுப்பணிகள்" குறித்த செலவினமாகும். இதற்காக சட்டப்பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும்.

சட்டப்பேரவையின் ஒப்புதலைப்பெறும்வரையில், இத்திட்டத்திற்கான ஆரம்பச்செலவினம், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு-செலவு பொது-I)த்துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச்செலவு நிதியிலிருந்து நடப்பு நிதியாண்டிற்கு தேவைப்படும் முன்பணத் தொகையினை பெறுவதற்கு, வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளை இணைத்து, நிதி (வரவு-செலவு பொது-I)த்துறைக்கு விண்ணப்பிக்குமாறு தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, சென்னை-5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலும், இச்செலவினம் குறித்து சட்டப்பேரவையின் கவனத்திற்கு கொண்டு வரும்பொறுட்டு, இவ்வாண்டின் துணை மதிப்பீட்டில் (Supplementary Estimates) சேர்த்திட தேவையான விளக்கக்குறிப்பினை உரிய நேரத்தில், நிதி (வரவு-செலவு பொது-I)த்துறைக்கு அனுப்பி வைக்குமாறு தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித்துறை, சென்னை-5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் அத்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 20432/பொ.ப.I/09-1, நாள் 16.4.2009 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப்பேரேடு எண்.20 (இருபது)ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.ஆதிசேஷையா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (கட்டடம்),
பொதுப்பணித்துறை, சென்னை -5 (இணைப்புடன்).
கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டிட(திட்டம் மற்றும் வடிவமைப்பு) வட்டம், சென்னை-5
செயற் பொறியாளர், பொதுப்பணித்துறை, தமிழக அரசு கட்டிட ஆராய்ச்சி மையம், தரமணி, சென்னை - 600 0113
மாநில கணக்காயர், சென்னை -18
மாநில கணக்காயர், சென்னை– 9
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–5

நகல்:-
நிதி (பொ.ப.I)/ (வரவு செலவு (பொது.1) / (வரவு செலவு (பொது II) த்துறை,
உபரி/இருப்புக்கோப்பு

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.